


மலர் 1 | 13-1-63 | இதழ் 11-12

# பூரிப்படைகிறேன் பெருமைப்படுகிறேன்

ஆண்டில் எத்தனையோ திருவிழாக்கள், பண்டிகைகள் வந்து போகின்றன. அத்தனைக்கும் புராண இதிகாச அடிப்படையில் கற்பனைக் கதை உண்டு.

பொங்கல் திருநாளுக்கு அடிப்படை – கற்பனைக் கதை இல்லை. கடுமையான உழைப்பை உணர்த்தும் நாள் பொங்கல் திருநாள்.

அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் நாடெங்கிலும் பொங்கல் திருநாளை சிறப்பானதோர் விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சென்ற ஆண்டு நாம் நிலத்தில் மட்டும் கடுமையாக உழைக்கவில்லை, களத்திலும் பலம் வாய்ந்த கம்யூனிஸ்ட் எதிரியுடன் போராடியிருக்கிறோம்.

நிலத்தில் வியர்வை முத்துக்கள் சிந்திய உழைப்பால் செந்நெல் மணிகள் கொத்துக் கொத்தாய் விளைந்திருக்கின்றன. களத்தில் நமது மாவீரர்கள் கொட்டிய குருதியால் வெற்றி முத்துக்கள் உலகம் போற்றும் வண்ணம் விளைந்திருக்கிறது.

ஆகையால் இந்த ஆண்டு பொங்கல் திருநாளில் சர்க்கரைப் பொங்கலோடு, செங்கரும்புச் சாறோடு, செவ்வாய்த்தளிர்களின் சிங்காரப் புன்னகையோடு இமயத்து மண்ணில் விளைந்த வெற்றிக் கனிகளும் நமக்கு விருந்தாகக் கிடைத்திருக்கிறது.

"பிரிவினை சக்திகளை ஒடுக்க மாநில அரசுக்கு மத்திய அரசினர் அதிக அதிகாரம் தரவேண்டும்" என்று தமிழக அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

கூடுதலான அதிகாரங்கள் வழங்குவது மட்டுமல்ல. விடுதலை விரும்பிகளை வேரோடு சாய்க்கத் தடைச்சட்டமெனும் பெரும்புயலையே உருவாக்கிவிடுவோம் என சாஸ்திரியார் தலைமையில் – குமரி முனையிலே கூடிய குழு முடிவு செய்தது.

அந்த முடிவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து கிடைக்கப் போகும் பதிலையும் அவர்களே, விபரீதமாகக் கற்பனை செய்துகொண்டு, உள்ளூரப்பொங்கி வந்தார்கள்.

விபரீதமான பதில் கிடைக்கும்! விளைவுகளைக்காட்டி, சங்கிலியால் பூட்டி, பாதாள அறைக்குள் தி. மு. கழகத்தவரை தள்ளிவிடலாம். கூண்டுப் புலியாக்கிவிடலாம் குகைப்பட்ட சிங்கமாக்கி விடலாம். குழிவிழுந்த யானையாக்கி மகிழலாம் என்று பகற்கனவு கண்டவர்களில், லால்பகதூராரும் நமது மாநில பச்சைத் தமிழரும் முதன்மை யானவர்கள்.

மலருக்கே ஆபத்தென்னும் பொழுது தேனுக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்கள் அல்லர் தி. மு கழகத்தவர்.

விடுதலை உணர்வு தி. மு. கழகத்தவருக்கு உயிர்ப் பிரச்சினைதான் என்றாலும், இந்தியத் துணைகண்ட எல்லையில் ஏற்பட்டிருக்கும் துயர நிகழ்ச்சி நமது மானத்திற்கு வந்திருக்கும் பேராபத்தாகும்.

மானத்தைவிட்டு உயிருக்காக மட்டும் போராடிக்கொண்டிருக்கும் வழிவழியல்ல. தி. மு. கழகம் என்பதை அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கை உறுதிப்படுத்தியது.

கடல் கொந்தளிப்பில் கலத்தைக் கவிழ்த்துவிடலாம் என எதிர்பார்த்துக்கொண்டிருந்த காமராசர்கள் ஏமாற்றமடைந்தனர். அவர்களின் அரசியல் சாணக்கியம் மாபெரும் விபத்துக்கு ஆளாகி உருத் தெரியாமல் சிதைந்தது.

அறிஞர் அண்ணா அவர்களின் காந்தீயத் தன்மை வெற்றி பெற்றது.

இந்தச் செய்தி பொங்கற் புதுநாளில் – இந்த ஆண்டில் நமக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

"**தென்னகத் தலைவன்**" பொங்கல் மலராக வெளிவராதது பற்றி அதன் மீது பற்றும் பாசமும் கொண்டுள்ள பல்லாயிரக் கணக்கான தோழர்கள் வருத்தம் தெரிவித்து அஞ்சல் எழுதியுள்ளார்கள்.

மலரெனில் அது சிறப்பாக இருக்கவேண்டும். காலமெல்லாம் பாதுகாத்து வைக்கும் கருத்துக் கருவூலமாய் அமையவேண்டும்.

அதற்கான காலமும் வசதியும் குறைந்திருந்ததால் இந்த ஆண்டு இருபது காசு விலையில் சிறப்பிதழ் தந்திருக்கிறேன். **கலைஞர் கருணாநிதி** அவர்கள் தந்திருக்கும் "**அண்ணல் இட்ட கணையாழி**" சிறப்பிதழுக்கு மகுடமாக அமைந்துள்ளது. **கே. ஏ. மதியழகன்** அவர்கள் லண்டன் மாநகரத்தின் கீர்த்தி மிக்க வரலாற்றை "**எதையும் தாங்கும் லண்டன்**" மூலம் அருமையாக உருவாக்கிக் காட்டியுள்ளார். தொடர்ந்து உங்கள் பாராட்டைப் பெற்றுவரும் **எஸ். எஸ். தென்னரசு** அவர்களின் "**வைராக்கியம்**" தொடரோவியம் வழக்கம்போல் இடம் பெற்றுள்ளது.

மனம் திறந்து சொல்லுகிறேன். "**தென்னகத் தலைவன்**" துவங்கும்பொழுது, தலைவர்களின் அன்பும், கழக முன்னோடிகளின் வாழ்த்தும் உங்களின் பேராதரவும் இத்துணை பெரிய அளவில் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவேயில்லை.

அக்டோபர் 28-ல் கடற்கரை வரவேற்புக் கூட்டத்தில் முதல் இதழைக் கண்ணுற்ற **அறிஞர் அண்ணா** அவர்கள் "ஏடு **சிறப்பாக அமைந்துள்ளது. இப்படியே தொடர்ந்து** வெளி**வரட்டும்**" என இதயங் குளிரப் பாராட்டினார்கள்.

"**எழில் மிக்க ஏடு. ஒவ்வொரு கிழமையும்** சிறப்பாக **வெளிவருகிறது. தளராது உழையுங்கள் ஏடு வளரும், ஏற்றம் பெறும், என் வாழ்த்துக்கள்** என்று மனமாரப் பாராட்டினார் **கலைஞர் கருணாநிதி**.

"**எல்லாச் சிறப்புக்களும் அமைந்து நிறைவாக இருக்கிறது**" எனப் பெருமைபடச் சொன்னார் **கே. ஏ. மதியழகன்**.

"**வார ஏடான "முரசொலி" போல் இருக்கிறது. கழக ஏடுகளில் தென்னகத் தலைவன் தலைவனாகவே விளங்குவான்**" எனச் சிறப்பாகப் பாராட்டினார் **தில்லை வில்லாளன்**.

கிழமை ஏடான "முரசொலி" செய்து வந்த பணியைச் சிறப்புக் குலையாமல் "**தென்னகத் தலைவன்**" மூலம் செய்து வருகிறீர்கள். ஒவ்வொரு வாரமும் எங்களுக்குத் **தென்னகத் தலைவன்** பெரிதும் பயன்படுகிறதென்று **முத்து பழனீ** என்ற குடந்தை நண்பரொருவர் வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளார்.

இப்படி நாள்தோறும் கிடைத்துவரும் தலைவர்களின் அன்பும், உங்களின், பாராட்டுரைகளும் எனக்குப் பூரிப்பை, மகிழ்ச்சியை, தெம்பை தெளிவைத் தந்து ஏட்டினை இன்னும் சிறப்பாகக் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வத்தை விநாடிக்கு விநாடி வளர்த்து வருகிறது.

தான் பெற்ற செல்வத்தை உற்றாரும், மற்றோரும் உச்சி மோந்து முத்தமிட்டு, உருக்கி வார்த்த தங்கமெனப் பாராட்டி, அதன் தளிர் நடையை, குழல் வெல்லும் மொழியை சொல்லிச் சொல்லிப் பெருமைப்படும்பொழுது அந்த மரகதத்தைப் பெற்றெடுத்த மாதாவுக்கு பிரசவ வேதனை பேரின்பமாகவல்லவா தோன்றும்.

அந்தப் பேரின்பத்தை கிழமை தோறும் உங்கள் பாராட்டுரைகள் மூலம் பெற்றுப் பெருமையடைகிறேன்.

இன்னும் சிறப்பாக, இதனினும் கருத்துக்களஞ்சியமாக முத்து விளைந்த சிப்பியாக, அரசியல் சூதாடிகளின் முகத்திரை கிழிக்கும் கூர்வாளாக, கழகத் தோழர்களுக்கோர் கையகராதியாக **தென்னகத் தலைவனைக்** கிழமை தோறும் கொண்டு வர முயற்சிக்கிறேன்.

சிறப்பைத் தருவது என் கடமை. அதை வளர்க்கும் பொறுப்பு உங்களுடையது.

பால் பொங்கி, பாலகர் மனம் பொங்கி, தாயின் அகம் பொங்கி, தையலார் மஞ்சள் முகம் பொங்கி, தாழம்பூ மணம் பொங்கி, இல்லத்தில் உள்ளார் இதயமெல்லாம் பொங்கிக் களித்திருக்கும் இத் தைத் திருநாளில் "**தென்னகத் தலைவன்**" சார்பாக என் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உங்களில் ஒருவன்

அன்புள்ள



# அண்ணன் இட்ட கணையாழி

## கலைஞர் மு. கருணாநிதி

அகவிலைக் குறைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையில் இருக்கும்போது **'தென்னகத் தலைவன்'** என்ற கிழமை ஏடு வெளிவரப் போகிறது என்ற விளம்பரத்தைக் கண்ணுற்றேன். முதல் அறிவிப்பிலேயே **தென்னகத் தலைவன்** பீடு நடை போடக் கூடியவன் என்ற அறிகுறி எனக்குத் தெரிந்தது. முதல் இதழ் தமிழகத்தைக் கவர்ந்தது. **"யார் அந்தத் தினகரன்"**? என்று ஆவலோடு கேட்கக் கூடியவர்கள் அதிகமானார்கள். ஆத்திரத்தோடு கேட்டவர்களும், அசூசையுடன் கேட்பவர்களும் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். ஆவலோடு கேட்டவர்கள் பட்டியலில் நானும் ஒருவன்.

முரசொலிக்குப் பக்கத்து அலுவலகத்தில் பல நாள் அவர் பணி புரிந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர பார்த்ததில்லை.

சிறையிலிருந்து விடுதலை பெற்று அறிஞர் அண்ணா அவர்களுடன் சென்னை வந்தபோது கடற்கரைக் கூட்டத்தில் ஒரு இளம் நண்பர் ஆர்வத்துடன் மேடைக்கு ஓடிவந்து ஒரு கணையாழியை என்னிடம் கொடுத்து 'தென்னகத் தலைவன் சார்பில் தென்னகத் தலைவர் அண்ணா அவர்கள் இதனைத் தங்களுக்கு அணிவிப்பார் என்று கூறிவிட்டு கூட்டத்தோடு கலந்துவிட்டார். நான் அதனை அண்ணாவிடம் தந்து, அவர் எனக்கு அதனை அணிவிக்கக் காத்திராமல், உடனே அதைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டேன்.

ஏன் வம்பு? முன்பு ஒரு மோதிரம் கடற்கரையில் பெற்றதற்கே கடல் கொந்தளித்துப் போயிற்று! அந்த எரிச்சல்காரர்கள் இப்போது கழகத்தில் இல்லை என்றாலும் நாட்டின் எங்கேயோ ஒரு மூலையில் இருந்துகொண்டுதானே இருக்கிறார்கள்.

[illegible]ரம் தந்த இளம் நண்[illegible] **தினகரன்** என்று மறு[illegible] கேள்விப்பட்டேன்.

ஆற்றலும் ஆர்வமும் துள்ளக் கூடிய தோழரின் சீரிய முயற்சியால் **"தென்னகத் தலைவன்"** ஏடு, சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுவிட்டது என்று அனைவரும் பாராட்டுகின்றனர்.

அவர் தந்த கணையாழியை அண்ணா தந்த கணையாழி, எனக்கு நினைவூட்டியது மாத்திரமல்ல; வேறு சில கணையாழிகளைப் பற்றிய நினைவுகளையும் எழுப்பிவிட்டது.

சாகுந்தலத்தில் துஷ்யந்தன் அளித்த கணையாழியைத் தொலைத்துவிட்டு அதன் காரணமாகச் சகுந்தலை, கணவனின் அன்பையே இழக்க நேரிட்டு எவ்வளவு துடித்துப் போயிருக்கிறாள். இறுதியில் ஒரு மீனல்லவா தன் உயிரைத் தந்து அவள் காதலைக் காப்பாற்றியது.



இந்தியை எதிர்த்துத் தமிழர் இயக்கம் நடைபெற்றபோது ஒரு நண்பர் பயங்கரமான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். நாட்கள் ஓடுகின்றன. அவரோ வாடாமல் உயிரோடு இருக்கிறார். அந்த உண்ணாவிரதம் அப்போது இந்தி எதிர்ப்பு இயக்கத்தை முன்னின்று நடத்திய பெரியார் போன்ற தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் பெரியார் அந்த நண்பரைப் பார்க்கச் சென்றார்.

உண்ணாவிரதக்காரர் இன்னும் ஓரிரு விநாடிகளில் உயிரை விட்டுவிடுபவர் போலப் பேசினார். பெரியாருக்குக்கூடச் சற்று மனமிளகி விட்டது. உண்ணாவிரதக் கொள்கை பிடிக்காவிட்டாலும் அந்த முறையை மேற்கொண்டு, ஒருவன் உயிர்விடப் போகிறான் என்றால் கல்மனமும், கலங்கிவிடாதா என்ன?

அவரைப் பார்த்துப் பெரியார் மிக உருக்கமாக, "என்னப்பா வேண்டும்?" என்று தழுதழுத்த குரலில் கேட்டார்.

அவர் பெரியாரைக் கனிவுடன் நோக்கி, பெரியார் விரலில் அணிந்திருந்த விலையுயர்ந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கேட்டார்.

அவ்வளவுதான்; பெரியார் சட்டென எழுந்து விட்டார். பின்னர் இரண்டொரு நாட்களில் உண்ணாவிரதம் நின்று போயிற்று.

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்தபோது விருந்தொன்றில் கலையுலக நண்பர் ஒருவர், தான் அணிந்திருந்த அசோகச் சின்னமுள்ள மோதிரத்தைக் கழற்றி சூ-என்-லாய்க்கு அணிவித்தாராம். அதனை அணிந்து கொண்ட சூ-என்-லாய், "இந்தியா இப்போது என் கையில்" என்று குறும்புச் சிரிப்போடு சொன்னாராம்.

சீனப் பிரதமரின் அந்த வாசகத்தில் அடங்கிக்கிடந்த நச்சு எண்ணம் இப்போதல்லவா விளங்குகிறது.

அந்த நச்சு எண்ணம் கக்கிவிட்ட போர்ப் புயல் நாட்டைச் சூழ்ந்திருக்கும் வேளையிலே பொங்கல் விழா எடுக்கும் தமிழர்கள் தங்கள் இல்லங்களில் பால் சோறு பொங்கும்காட்சி கண்டு இதைவிடப் பன்மடங்கு உணர்ச்சிப் பொங்கப் பகைவர்களை விரட்டியடிக்க வேண்டும் என்று சூளுரைத்துக் கொள்வர்.

"செங்கரும்பில் இனிப்பில்லை; செந்தமிழே! உந்தன் சின்ன இதழ்த் தித்திப்பே எனக்குச் சொர்க்கம்!" எனக்கூறி மகிழ்ந்த காளையர் இந்த ஆண்டுப் பொங்கல் நாளில் "போய் வருவேன் போர்முனைக்கு! என் நெஞ்சில்பட்ட விழுப்புண்ணுக்கு நீயளிக்கும் முத்தமே இன்பச் சொர்க்கத்திற்கு ஈடு கொடுக்கவல்லது!" என்று பூரிப்புடன் புகல்வர்.

இஞ்சியை நோக்குவர் வஞ்சியர்! அதனைத் தின்றவன்போல் இளிக்கின்ற சீனனைப் புறமுதுகு காட்டச் செய்வீர் என்று தமை மணந்த வீரர்க்கு விடை கொடுத்து அனுப்புவர்.

கன்னச் சிவப்பு மின்னிட காதலியணிவித்த கணையாழியுடன் களம் சென்றான் காளை! அவன் திரும்பவில்லை. கணையாழி மட்டுமே திரும்பியது என்ற செய்தியும் வரக்கூடும். "நாட்டுக்குத் தேவையான நற்பணி செய்தான் என் கணவன்" என்று வாயார மனமாரப் பாராட்டி அவன் அணிந்திருந்த கணையாழியை நெஞ்சத்தில் பதித்துக்கொண்டு விம்மிடவுங் கூடும் அந்த வேல்விழியாள்.

நான் குறிப்பிட்ட எல்லாக் கணையாழிகளையும்விட அந்தக் கணையாழிக்கல்லவோ தனிப் பெருமை!

அண்ணன் எனக்கு அணிவித்த கணையாழிக்கு அந்தப் பெருமை வந்திட இன்னும் எவ்வளவு நாட்கள் தள்ளிப் போடப்படுமோ என்றல்லவா இந்தப் பொங்கல் புதுநாளில் கூட நான் ஏங்குகிறேன்.

விரைவில் வந்திடும் அந்த வீரத் திருவிழா என்று என் போன்ற அனைவர்க்கும் உறுதியளிக்கும் விதத்திலும், பெற்ற உறுதிக்குப் பக்கம் நிற்கப் பல்லாயிரவர் இருக்கிறோம் என்று துணிவளிக்கும் வகையிலும் நடைபெறும் நன் முயற்சிகளில் **"தென்னகத் தலைவன்"** நடத்தும் கொள்கைப் பிரச்சார முயற்சியும் முக்கியத்துவம் பெறுகிறது எனப் பாராட்டித் **தோழர் தினகரனுக்கு** என் வாழ்த்துக்களைக் குவிக்கிறேன்.






○ கே. ஏ. மதியழகன் எம். எல். ஏ. ○

ஜெர்மன் நாட்டுப் போர் விமானங்கள்ஐம்பத்தேழுஇரவுகள் இடையருது குண்டுமாரி பொழிந்தன.

எழுபது லட்சம் மக்களைக் கொண்ட லண்டன் நகரத்தில் நெருப்பின் நர்த்தனம் நீங்காத காட்சியாய் மாறியது!

“லண்டண் நகரை சாம்பல் மேடாக்குகிறேன் என்று சபதம் செய்தான் பெர்லின்பேயன் ஹிட்லர்.”

கூட்டுத்தோழன் கோயரிங் ஹிட்லரின் ஆகாயப் படைத் தளபதியாக அமர்த்தப் பட்டான். தினமும் இருநுறுக்கு மேற்பட்ட ஜெர்மன் போர் விமானங்கள் ஒவ்வொரு இரவும் லண்டன்மீது தீப்பிழம்பை ஏவின.

ஒருநாள் மாலை — கடற்கரை ஓரம் பாதுகாப்புஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு தனது அலுவலகத்திற்கு பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் திரும்பிக் கொண்டிருந்தார். எதிரியின் குண்டு வீச்சு துவங்குகிறது என்பதை அறிவிக்க அபாயச் சங்கு ஊதியது. நெடுஞ்சாலை முழுவதும் “க்யூ”வரிசையில் தொலை தூரத்திலேயுள்ள தத்தமது இல்லங்களுக்குச் செல்ல ஆடவரும் பெண்டிரும் நின்றுகொண்டிருந்தனர். கணநேரத்தில் ஜனசஞ்சாரம் மிகவும் குறைந்துவிட்டது. எனினும் வெளிரிய முகத்துடன் அங்கும்,இங்கும் கடைசி பஸ்ஸிற்காக பலர் காத்திருந்தனர். பனிப்படலம் மூடியிருந்தது. குளிரில் கத்தியின் கூர்மை இருந்தது,

கோர இரவும், கொடிய எதிரியும் வெகு வேகமாக விரைந்து வந்து கொண்டிருந்தனர்.

உலகின் ரமணியமான பெருநகர் எவ்வளவு பெரிய வேதனைப் புயலில் அலைக்கழிக்கப்படுகிறது என்பதை அவரால் தாங்க முடியவில்லை.சர்ச்சிலின் இதயத்தின் அடித்தளத்தை எதிரே நிழலிட்ட பயங்கரம் உலுக்கிவிட்டது! அவரையும் அறியாமல் தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்:

**எவ்வளவு காலத்திற்கு இந்த கோரம் நம்மைத் தொடரும்? எவ்வளவு இடுக்கண்களை இன்னமும் தாங்க வேண்டியிருக்கும்?**

**நமது தாங்கும் சக்தியின் வரையறைதான் என்ன?**

கோடிக்கணக்கான பிரிட்டிஷ் மக்கள் வாழ்வதா? சாவதா? என்ற உயிர்ப் பிரச்சினைக்கு பொறுப்பேற்றிருந்த அந்த பொறுப்பாளனின் ஆயிரம் கவலைகளுக்கு காரணங்கள் இருந்தன.

எழுபதுலட்சம்மக்கள்வாழும் லண்டனின் சாக்கடைக் குழாய்கள் நாசமாக்கப்பட்டால் நிலைமை என்ன?

அவ்வளவு பேருக்கும் குடிதண்ணீர் வழங்கும் குழாய்களின் தலைமை நிலையம் தாக்கப்பட்டால் அதன் விளைவு எபபடியிருக்கும்?

சாக்கடைக் குழாய்களுக்கும் குடிதண்ணீர் குழாய்களுக்கும் ஓர் இணைப்பு ஏற்பட்டால்— சாக்கடைக் கழிவு, குடிதண்ணீரில் கலந்துவிட்டால்நிலைமை என்னவது? சாக்கடை அமைப்புத் தாக்கப்பட்டு, சேறும் சகதியும் நகரிலே வழிந்தால், அதனல் ஏற்படும் நாற்றம் மட்டுமல்ல, நாசத்தை கணக்கிட முடியுமா? அது கொண்டுவரும் கொள்ளை நோயையும், வியாதியையும் எப்படி சமாளிப்பது?

ஏற்கனவே லண்டன் நகரச் சாக்கடையின் மூல வாய்க்கால் குழாய் உடைக்கப்பசட்டிருந்தது. சாக்கடை முழுவதையும் தேம்ஸ் நதியில் துர்நாற்றத்தைப் போக்க இரசாயனக் கலவைகளை குடம் குடமாகக் கலக்கினர்கள். இரண்டு துர்நாற்றங்களும் வயிற்றைக் கலக்கியது.

லட்சக் கணக்கான மக்கள் குளிர் நிறைந்த இரவுகளை, குண்டுமாரி துவங்கியவுடன் பாதாள பதுங்குமிடங்களில் கண்விழித்துக் கழித்தார்கள். காலரா வருமோ, கடும் வைசூரி வருமோ, காய்ச்சல் வருமோ என்ற கவலை பிடித்துத் தின்றது.

எதிரியின்குண்டுவீச்சுப்பெருகியது. பாதாளப் பாதுகாப்பிடம் போதவில்லை. லண்டன் நகர நிர்வாகம் புதிய வகையில் அமைக்கப்பட்டது. காலங்கடந்து வெடிக்கும் வெடிகுண்டுகளை, விமான தளங்கள், ரயில்வே பாதைகள், ராணுவ தொழிற்சாலைகள் மீது பகைவன் வீசினன். இவைகளுக்கு மாற்றுக் கண்டுபிடிக்க வேண்டியவேலை வந்தது.

அலுவலகங்களை குறிவைத்துக் குண்டு தாக்கியது. பாராளுமன்றக் கட்டிடத்திற்கே ஆபத்து வந்தது! எனினும் வேறு இடங்களுக்குச் சர்க்கார் அலுவலகத்தை மாற்றுவதையோ, பாராளுமன்றம் வேறு இடத்தில் நடைபெறுவதையோ உறுப்பினர்கள் விரும்பவில்லை. மக்களுடன் சேர்ந்து அரசும், ஆளத் தேர்ந்தெடுக்கப்பட்டோரும் அவர்கள் துயரத்தில் பங்கு கொண்டனர். ஒளிவிடங்களுக்கு ஓடிவிடவில்லை. சில முக்கிய ராணுவ அலுவல்கள் பாதாள அறைகளிலே நடைபெற்றது.

மாட்சிமை நிறைந்த மன்னர் பிரானும் ராணியும் வழக்கமாக வசிக்கும் விண்ட்சர் மாளிகையிலிருந்து புறப்பட்டு, கடும் விமானத் தாக்குதல் நேரத்தில் பக்கிங்ஹாம் அரண்மனையைத் தங்கள் உறைவிடமாக்கிக் கொண்டனர். இங்கிலாந்துப் பிரதமர் சர்ச்சில் அருகே ஓர் நாள் குண்டு விழுந்தது. ஒயிட்ஹால்-வெஸ்ட்மின்ஸ்டர் பகுதி எதிரியின் முக்கிய இலக்காகியது. சர்க்காரின் முக்கிய இருப்பிடம் சிதறுண்டால் நாட்டு மக்களிடம் பீதி உண்டாகும் என நம்பினன்!

லண்டன் நகர மக்களின் உறுதிப்பாட்டின் முன்பு எதிரி மலைத்தான். அவனது போராட்டத் தந்திரம் மாறியது. ஒரு குறிப்பிட்ட நாளில் பூர்ணபெளர்ணமியன்று 430ஜெர்மன் போர்விமானங்கள் 386டன்அளவுள்ள வெடிகுண்டுகளை லண்டன் மீது வீசின. இதுநாள் வரை பாதுகாப்பிடங்களுக்குப் போங்கள், பதுங்கிக் கொள்ளுங்கள் என்று கூறிவந்த லண்டன் அரசு, வேறு தாக்கீதுகளைப் பிறப்பித்தது. “கூரை மீது அமருங்கள், தீயை எதிர்த்துப் போரிடுங்கள், காவல் புரியுங்கள். தீயை அணையுங்கள், அதற்கு அணி திரட்டுங்கள்” என்று ஆணை பிறந்தது.

நெடிய இரவுகளில், பயங்கரமான தீப்பிழம்புகளுக்கு மத்தியில் தீயணைக்கும் படையினர் கண்ணிமைக்காது காவல்புரிந்தனர். கடமையாற்றினர். எத்தனையோ பெருநெருப்பு அவர்தம் பணியின் முன்பு அவிந்து மடிந்தது. ஒவ்வொரு குடிமகனும் தீயணைக்கும் பணியில் தளநாயகனுன். தாய்க்குலமும் தனது பங்கைச் செலுத்த முன்வந்தது.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு திடீரென்று ஓர்நாள் லண்டன் நகரில் அபாயச் சங்கு ஊதவில்லை. இந்த மயான அமைதி பலருக்கும் மருட்சியைக் கொடுத்தது. “ஈதென்ன அதிசயமோ,ஆபத்தோ” என்று மனம்குழம்பினர்.மறுநாள் இரவு அதற்கு விடை கிடைத்தது.

எதிரியின் கவனம் வேறு முனையிலே திருப்பப்பட்டது. இங்கிலாந்தி[illegible] தொழில் நகரங்களைத் [illegible]தரைமட்டமாக்கும் வேலையில் விமானங்கள் இறங்கின.

காவண்ட்ரி நகரம் முதற் பலியானது. அஸ்தமன நேரத்தில் துவங்கி வைகறைக்குள் 500

(10-ம் பக்கம் பார்க்க)

வாங்கிவிட்டீர்களா? வாசித்துவிட்டீர்களா?

“அப்பா”

(மாதமிருமுறை குழந்தைகள் ஏடு)

கண்ணப்பன், கே. எஸ். வேலன், பூவை அமுதன் ஆகியோர் எழுதிய கதை, கவிதை.

வெகுவிரைவில் ஆரம்பமாகிறது 50 ரூ பரிசுப் போட்டி

தனி இதழ் விலை. 13 காசு

விவரங்களுக்கு:

“அப்பா” 10, குமரப்ப முதலி வீதி, சென்னை-34.

## வைராக்கியம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தது. உள்ளத்தில் ஏற்பட்டிருந்த அந்தக் கீரலைப் போக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வீரணன் விரும்பியிருக்கக்கூடும். இல்லாவிட்டால் உணர்ச்சியும், உருக்கமும் நிறைந்த அப்படி ஒரு கடிதத்தை சிலம்பாயிக்கு எழுதியிருக்க மாட்டான்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி திங்கள்கிழமையன்று வீரணன் ஆருவயலுக்கு வந்தான். சிலம்பாயி விம்மி விம்மி அழுதாள். மானகிரியின் மரணத்தை இசை கூட்டிச் சொல்லுவதுபோல் துயரத்தைத் தொடுத்து வைத்தாள். வீரணனுக்கும் கண் கலங்கியது. வீட்டுக்குள் தேம்பும் குரல் கேட்டது. இருட்டுக்கும் ஒரு ஒளி உண்டல்லவா! அந்த ஒளியில் உள்ளே செவந்தி மாலையின் கண்கள் கண்ணீரில் மூழ்கி மின்னுவதைப் பார்த்தான் வீரணன். செவந்தி மாலையை எட்டு வயதில் ஒட்டுப் பள்ளிக்கூடத்திற்கு போகும்போது பார்த்தவன் வீரணன். இப்போது அவள் தகதகவென்று சந்தனப் பொம்மைபோல் இருந்தாள்.

அன்று அவள் 'மாமா' என்று வாஞ்சையோடு அழைத்துக்கொண்டு வீரணனிடம் ஓடி வருவாள். வீரணன் இரண்டணா கொடுப்பான். சீனி மிட்டாய் வாங்கித்தின்று உதடுகளை சிவப்பாக்கிக்கொண்டே திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு ஓடிப் போவாள். அந்தச் செவந்தி மாலையா இப்போது இப்படி இருக்கிறாள். இன்று அவள் ஒரு நிலவு. அவளைச் சுற்றி நட்சத்திரங்களைப் போல் ஆயிரக்கணக்கான வாலிபர்கள். செவந்தியைப் பார்த்ததும் காலம் கொடியது என்று வீரணனுக்குப்பட்டது. பள்ளிச் சிறுமியை மலர வைத்துப் பூமணக்கச் செய்யும் அதே காலம், மின்னலிடும் தங்கக் கட்டி போன்ற மேனியை உருக்கி ஓடாக்கிவிடுகிறது என்று அவன் நினைக்கலானான். வீரணன் நினைத்ததில் தவறில்லை. மனித வளர்ச்சிக்கு ஒரு நடுப்புள்ளி உண்டு. பருவம் அந்த நடுப்புள்ளியைத் தொடும் வரை எல்லாம் ஏற்றமுள்ளதாக இருக்கும். வாழ்க்கையில் பொலிவும் புகழும் வந்து வந்து அலைமோதும். பருவம், நடுப்புள்ளியைத்தாண்ட ஆரம்பித்ததும் நரம்புகள் தளரும், முயற்சிகள் குன்றும், களைப்பும் பலவீனமும் ஏற்படும்; அதுவே பெரும் நோயாகிவிடும். இதெல்லாம் காலத்தின் குறைபாடுகளா? காலச் சக்கரம் தானாக ஓடும் சாரதி இல்லாத வண்டி. பலரது வாழ்க்கைச் சரித்திரங்கள் சுழன்று விளையாடிக் களைத்துப் போய் அந்த வண்டிச் சக்கரத்தில் சிக்கி கூழாகிவிடுகின்றன.

இப்போது சிலம்பாயி அந்தக் கட்டத்திற்கு வந்துவிட்டாள். தெருவில் நின்றுகொண்டு ஆவேசக்குரலில் அவள்போட்ட சபதத்தை வீரணனிடம் சொன்னாள். வீரணனுக்கு உடல் சில்லிட்டது.

(வளரும்)

## பாடு! பேசு

காட்டுக் கருங்குயிலே!—இசை
காட்டும் கருங்குயிலே!

கேட்டஉன் இன்னிசைப் பாட்டுஎன் நெஞ்சுக்கு
ஊட்டம் கொடுக்கவில்லை—கருத்(து)
ஓட்டம் கொடுக்கவில்லை!

ஆட்ட அலைகடலே!—நட
மாட்ட அலைகடலே!

கூட்ட அலைகளின் காட்டு இரைச்சலில்
வாட்டம் பறக்கவில்லை!—சினப்
பாட்டும் பிறக்கவில்லை!

சோலையின் வண்டினமே!—பூஞ்
சோலையின் வண்டினமே!

காலையில் தேனுண்ணும் வேளையில் பாடினாய்
காலம் விளங்கவில்லை—எதிர்
காலம் விளங்கவில்லை!

கோலப் பசுங்கிளியே!—எழிற்
கோலப் பசுங்கிளியே!

சோலையில் தென்னையின் ஓலையில் பேசினாய்
நாளைய செய்தியில்லை—அதில்
நாளைய செய்தியில்லை!

பாடிட வேண்டுமடா!—இசை
பாடிட வேண்டுமடா!

நாடு பிரித்திடக் கேடு தொலைத்திடப்
பாடிட வேண்டுமடா—இசை
பாடிட வேண்டுமடா!

பேசிட வேண்டுமடா—தினம்
பேசிட வேண்டுமடா!

தேசம் அடைந்திட மோசம் அகன்றிடப்
பேசிட வேண்டுமடா!—தினம்
பேசிட வேண்டுமடா!

புலவர் பொன்னிவளவன்


வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதை தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது—நற்சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை. ரூ 6-00
50—மாத்திரை. ரூ. 12-00

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்

S. V. R. கண்டர். R. I. M. P.

அரிசிப்பாளையம். லீ பஜார். P-O (சேலம்)


(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த விமானங்கள் 600 டன் குண்டுமாரியை பொழிந்தது. காவண்ட்ரி நகரம் சிதறுண்டு சின்னாபின்னப்பட்டது. 400 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். பெர்லின் வானொலி நிலையம், காவண்ட்ரி நகரத்தின் கதி, எல்லா நகரங்களுக்கும் சம்பவிக்க இருக்கிறது என்ற விஷ வார்த்தைகளைப் பொழிந்தது. எனினும் அந்த நகரம் அயரவில்லை. ஒரு வாரத்தில் பழைய நிலைக்குத் திரும்பியது.

மீண்டும் லண்டன்மீது குண்டு மழை. மாதா கோவில்களும், ஆயிரங்காலத்து வரலாற்றுக் கட்டிடங்களும் படுசூரணமாயின. அடுத்த இலக்கு பர்மிங்ஹாம் நகரம். மூன்று நாட்கள் அழிவின் ஆலிங்கனத்தில் அந்த இயந்திர நகர் சிக்கித் தவித்தது, 800 பேர் கொல்லப்பட்டனர். கரமிழந்தோர், காலிழந்தோர், கண்ணிழந்தோர் இரண்டாயிரத்தைத் தாண்டினர். சம்பவத்திற்கு இரண்டுநாள்கழித்துச் சர்ச்சில் பர்மிங்ஹாம் சென்றார். தாக்குதலிலே பலியான நகர தனையரும் தங்க மதலைகளும் புதிதான ஓர் சுடுகாட்டில் மொத்தமாகப் புதைக்கப்பட்டிருந்தார்கள். அந்தப் புதைகுழியில் மாவீரர் கண்ணீர் சிந்தினார்.

பிறகு பிரிஸ்டல், சௌதாம்டன், லிவர்பூல் போன்ற துறைமுகப்பட்டினங்கள் மீது ஜெர்மனியின் கோபக்கனல் பாய்ந்தது.

பிளிமௌத், செப்பீல்ட், மாஞ்செஸ்டர், கிளோஸ்கோபோன்ற ஆயுத தளவாட நகரங்கள் அக்கினிக்குண்டங்களாயின. இவைகளின் உச்சக்கட்டம் லண்டன் நகரிலேயே நடத்திக் காட்டப்பட்டது. 1940-ம் ஆண்டு டிசம்பர் திங்கள், 29-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை, ஜெர்மானியப் பகைப்புலத்தின் வெறித்தன்மை முழுதும் ஒருசேரத் திரண்டு லண்டன் மீது வெறியாட்டம் ஆடியது. குடிநீர்க் குழாய்கள் குறைந்த பட்சம் தண்ணீர் மட்டத்திலிருந்த நேரம். பாரசூட் சுரங்க வெடிகள், குடி தண்ணீர் குழாய்களை எடுத்த எடுப்பில் துண்டித்தன. புகைவண்டி நிலையங்கள் புகைந்து சாம்பலாயின. துறைமுகப் பகுதி பாழ்வெளியாக மாறிற்று. பல மாதா கோயில்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

ஒரே நேரத்தில் லண்டன் நகரத்தில் ஆயிரத்து ஐநூறு இடங்களில் பெருந்தீ பற்றி எரிந்தது!

"எதையும் தாங்கும் லண்டன்" என்று சூளுரைத்த லண்டன், தனது வீர சபதத்திற்கு செயலுருவம் தந்து கொண்டிருந்தது!